1981 ஜனவரி 31]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றிய விவரக் குறிப்புகள் என்னிடத்தில் இல்லை. ஆனால் இந்தச் சங்கு வழக்கமாகக் கிடைக்கும் வலம்புரிச் சங்கைவிட அளவில் சிறியதாக இருக்கிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் சாதாரண சங்கு எடுத்தால் எவ்வளவு பணம் கொடுக்க வேண்டும் என்றிருக்கிறதோ அதைப் போல் ஆயிரம் மடங்கு வலம்புரிச் சங்கிற்கு கொடுக்க வேண்டும் என்கிற விதி இருக்கிறது. இந்தச் சங்கிற்கு எவ்வளவு பணம் கொடுக்கப்படும் என்பது தெரியவில்லை. அதைப்பற்றி ஆராய்ந்து பார்த்து ஏதாவது ஒரு தொகை நிர்ணயிக்கப்படும்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சங்கிற்கு விலையாக எப்பொழுதும் கொடுக்கப்படுவதை விட பல மடங்கு அதிகமாகப் பணம் கொடுக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இந்தச் சங்கிற்கு எவ்வளவு கொடுக்கப்போகிறீர்கள்? இதுபோன்ற சங்கு இதற்கு முன்னால் கிடைத்திருக்கிறதா? அவைகளுக்கு அரசு இது வரையில் எவ்வளவு செலவு செய்திருக்கிறது?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது வலம்புரிச் சங்கிற்கென்று விதிக்கப்பெற்ற அளவில் இல்லாமல், அதைவிடச் சிறியதாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது. என்றாலும் எவ்வளவு கொடுக்கலாம் என்பது பற்றி ஆராய்ந்து வருகிறார்கள். விரைவில் முடிவு எடுக்கப்பட்டு, அந்த மீனவருக்குத் தரவேண்டிய தொகை தரப்படும். வேறு என்னென்ன வலம்புரிச் சங்குகள் எடுக்கப்பட்டன என்று கேட்டார்கள். விவரங்கள் விளக்கமாக இல்லையாதலால், தனிக்கேள்வி போட்டால், சேகரித்துத் தரப்படும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. கா. கோபாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பட்டி வலம்புரிச் சங்கு என்பது புதிய வகையைச் சார்ந்ததாக இருப்பதினால், இதனை அனைவரும் கண்டு களிக்கும் வகையில் கண்காட்சி சாலையில் வைக்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கு தற்போது சென்னை மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில்தான் இருக்கிறது. உறுப்பினர் அவர்கள் அங்கு சென்று, மீன் துறை இயக்குநர் அலுவலகத்தில் ஏதாவது பணிகள் இருந்தால் அதையும் முடித்துக்கொண்டு, இந்தச் சங்கையும் பார்த்து விட்டு வரலாம் என்று சொல்லிக் கொள்கிறேன்.

திருவண்ணாமலை அருகே உள்ள பால் குளிரூட்டும் நிலையம்

* வினா எண். 124 திரு. த. வேணுகோபால்: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

திருவண்ணாமலைக்கு அருகே வேங்கிக்கால் கிராமத்தில் உள்ள பால் குளிரூட்டும் நிலையத்திலேயே ஒரு பால் பவுடர் தயாரிக்கும் பிரிவும் ஏற்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: இல்லை.

திரு. கே. ஆர். சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலைக்கு அருகே வேங்கிக்கால் கிராமத்தில் பால் பவுடர் தயாரிக்கும திட்டம் இல்லை என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். வடஆற்காடு மாவட்டத்தில் அதிகப்படியான பால் உற்பத்தியாவதால், வடஆற்காடு மாவட்டத்தில் சத்துவாச்சேரி என்னும் இடத்தில் இத்தகைய பால் பவுடர் தயாரிக்கும் பிரிவை ஏற்படுத்த அரசு ஆலோசனை செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரியிலும் அதற்கு அருகிலே இருக்கிறசேலத்திலும் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை ஏற்படுத்தப்பட்டிருப்பதால், இந்த முயற்சியில் இந்த அரசு ஆராயவில்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பட்டு வளர்ப்புத் திட்டம்

* வினா எண் 125 திரு இரா. தாமரைக்கனி: மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பரா—

திருவில்லிப்புத்தூர் வட்டத்தில் பட்டுப்பூச்சி வளர்க்கும் திட்டத்தைத் தீவிரப்படுத்தும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு கே. ஏ. கிருஷ்ணசாமி: ஆம். தீவிரப்படுத்தும் திட்டம் உள்ளது திருவில்லிப்புத்தூரில் 'பட்டு வளர்ப்பு மாதிரி பண்ணை மற்றும் ''பயிற்சி நிலையம் ஒன்றை நான்கு லட்சத்து தொண்ணூறு ஆயிரம் செலவில் இந்த ஆண்டு முடிவிற்குள் நிறுவ முயற்சிகள் எடுக்கப்படுள்ளட்டது. இந்நிலையத்தில் விவசாயிகளுக்கு பட்டு வளர்த்தல் பற்றி பயிற்சி அளிக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி: வீட்டில் வைத்து வளர்க்கப்படும் புழுக்களுக்குத் தனியாக மின்சாரம் பயன்படுத்தப்படுவதில்லை. வீட்டில் உள்ள மின்விளக்கே போதுமானது. இதில் மின் கட்டணம் வசூலிப்பது .....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பட்டு வளர்ப்புத் திட்டம் பற்றிய கேள்வி.